**சென்னை-5, போக்குவரத்து ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.எண்: 33858/ஆர்பி1/2023 (ப.ஆ.எண்: 431/2023) நாள்: 20.09.2023**

பொருள் : பணியமைப்பு- போக்குவரத்து துறை- தமிழ்நாடு அமைச்சுப்பணி- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் ஆண்டிற்கான தொகுதி- IV பணிகள்- இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு (தேர்வு நாள்: 24.07.2022)-இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம்- ஆணைப்பிறப்பித்தல்.

பார்வை : செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண்: 1986/PSD-B2/2023, நாள்: 28.08.2023.

***********

**ஆணை:**

பார்வையில் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தில், தெரிவித்துள்ளப்படி 2022-2023-ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்காணும் நபருக்கு, பின்வரும் விவரப்படி இத்துறையில் தற்காலிகமாக கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணியமர்த்தி உத்திரவிடப்படுகிறது.

கீழ்க்காணும் நபரின் முதுநிலை அவர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | தேர்வாணைய பதிவு எண், பெயர் மற்றும் முகவரி (Tvl.) | தரவரிசை எண். | பணி நியமன பதவி | ஊதியம் | பணியமர்த்தப்படும் அலுவலகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1004001145<br>Thangaraj.A,<br>335/2 East Steet,<br>Salaimarakulam Post,<br>Karaiyappatti Taluk,<br>Virudhunagar -626 607 | 1093 | Junior Assistant | Rs. 19500/- (Pay in the level 8(1) of Pay Matrix) | DTC, Virudhunagar |

**2. நிபந்தனைகள்:**

1. 2016-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தகைள்) சட்டப்பிரிவு 20(5)-ன்படி பணியில் சேரும் போது உடற்தகுதி குறித்து அரசு மருத்துவ அலுவலரிடமிருந்து உடற்தகுதி சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரை மாவட்ட மருத்துவக் குழுவிடம் மாற்றுத்திறனாளிகளுக்கான விழுக்காடு சான்றிதழ் (Percentage of Physically Challenged) பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் தனியர் தமது வயது, கல்வித்தகுதி மற்றும் சாதிச்சான்றிதழ் ஆகியவற்றின் அசல் சான்றிதழ்களை பணியில் சேரும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. தனியர் இப்பணிநியமன ஆணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் பணியில் சேர வேண்டும். மேலும் பணியில் சேர கூடுதல் கால அவகாசம் ஏதும் தரப்படமாட்டாது. உரிய நாட்களுக்குள் பணியில் சேரத்தவறினால் நடப்பில் உள்ள 2017-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய நடைமுறை விதிகளின்படி, தனியரின் பெயரை தெரிவுப்பட்டியில் இருந்து நீக்கம் செய்திட பரிந்துரை செய்யப்படும்.
3. இவர் தமது வயது கல்வித்தகுதி/ இதர சான்றிதழ்களின் அசல் சான்றிதழ்கள் மற்றும் தனது கடவுச்சீட்டு அளவுள்ள புகைப்படம் ஆகியவற்றுடன் பணியில் சேரும் போது சமர்ப்பிக்க வேண்டும்.
4. இந்த தற்காலிக பணி நியமனம் தனியரால் தேர்வாணையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்/ சான்றிதழ்கள் தவறானவை என பின்னர் தெரியவந்தால் அவரது தெரிவு மற்றும் பணி நியமன ஆணை ரத்து செய்யப்பட்டு உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
5. தனியரது பணிநியமனம் இத்துறையில் தற்காலிகமானது. மேலும இப்பணி நியமனம் தொகுதி- IV இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்திடல் தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள ரிட் மனுக்கள் மற்றும் ஏனைய வழக்குகளின் மீதான தீர்ப்புகளுக்கு உட்பட்டதாகும்.

04 OCT 2023

6. தனியார் பணியில் சேர்ந்தவுடன் தனியாரது வேலை வாய்ப்பக அட்டையினை பணி நியமன அலுவலரிடம் ஒப்படைப்பு செய்ய வேண்டும். பின்னர் தனியாரது பெயரைத் வேலைவாய்ப்பிற்காக காத்திருப்போர் பட்டியலில் இருந்து நீக்க பரிந்துரை செய்யப்படும்.

7. 2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 21(1)-ன்படி தமிழக அரசின் அலுவல் மொழியான தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றதற்கான SSLC மதிப்பெண் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். SSLC பொதுத்தேர்வில், தமிழ் மொழியில் தேர்ச்சி பெறாமல் இருந்தால் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் இரண்டாம் நிலை தமிழ்மொழித்தேர்வில், பணியில் சேர்ந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்குள், தேர்ச்சிப் பெற வேண்டும்.

8. தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் 1973 விதி 7(3)-ன் படி பணியில் சேரும் பொழுது தனது அசையா மற்றும் அசையும் சொத்து விவரப்பட்டியலை உரிய படிவத்தில் ( Form I to V) சமர்ப்பிக்கப்பட வேண்டும். ( மாதிரி படிவங்கள் இணையதளம் - http://www.tnpsc.gov.in/t_nadu govt servants conduct rules pdf - ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்).

9. பணியாளரின் முதுநிலை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தெரிவு பட்டியல் முதுநிலைப்படியே நிர்ணயிக்கப்படும்.

3. போக்குவரத்து துறையில் இளநிலை உதவியாளர் பதவியிலிருந்து அடுத்த நிலையான உதவியாளர் பதவி உயர்வு பெற கீழ்க்காணும் பயிற்சி மற்றும் துறைத்தேர்வுகள் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

1. பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் அடிப்படை பயிற்சி (இதன் தொடர்பாக உத்தரவு முதுநிலை அடிப்படையில் பின்னர் வழங்கப்படும்.)
2. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு
3. சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு பகுதி-1
4. மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகள் - துறைத்தேர்வு.

ஒம்/-அ.சண்முக சுந்தரம்,
போக்குவரத்து ஆணையர்,
சென்னை-05

பெறுநர் (ப.அ.ஒ.அ)
1004001145
Thangaraj.A,
335/2 East Steet,
Salaimarakulam Post,
Karaiyappatti Taluk,
Virudhunagar -626 607

**நகல்:**

1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-03
2. துணைப் போக்குவரத்து ஆணையர், விருதுநகர்
3. வட்டாரப்போக்குவரத்து அலுவலர், (பணியில் சேர்ந்திடும் இளநிலை உதவியாளர்களிடம் அசல் சான்றிதழ்கள் மற்றும் அவரின் புகைப்படத்தினை சரிப்பார்த்தும், வேலைவாய்ப்பு அட்டையினை பெற்று பணி வழங்குமாறும், வேலைவாய்ப்பு அட்டையினை உரிய மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலருக்கு அனுப்பி வேலை வாய்ப்பக பதிவேட்டில் பெயர் நீக்கம் செய்திட பரிந்துரைத்தும் அதன் தகவலையும், தனியர் பணியில் சேர்ந்த நாள் விவரத்தினையும் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்).
4. தனி எழுத்தர், போக்குவரத்து ஆணையர்/ இணைப்போக்குவரத்து ஆணையர்
5. பணியமைப்பு ஆணை புத்தகம்
6. உபரி 2

// ஆணைப்படி//

20/9/2023

இணைப் போக்குவரத்து ஆணையர் (நி)
சென்னை-5

20/9/23